# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

இதழ் - 01

15.01.2023








முட்டைக்கு என்ன நடக்கிறது? 06






0 ரோவிலிருந்து ஹீரோவான.. 10





வருமானம் தரும் யூரியுப் 13





தமிழகத்துக்கான கப்பல், விமான சேவையால் வடக்குக்கு என்ன பலன்? 14




# பனையே எமது பொருண்மியம்



## வீடு வாடகைக்கு தேவை

திருநெல்வேலி, நல்லூர், கச்சேரி ஆகிய வற்றிற்கு அண்மித்த பகுதிகளில் இரண்டு பேர் (கணவன், மனைவி) தங்குவதற்கு சிறிய வீடு வாடகைக்கு தேவை. தொடர்புகளுக்கு - 0758869168

-----------------------------------------

யாழ் நகரினை அண்மித்த பகுதிகளில் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை. நீண்டகால வாடகை அல்லது குத்தகை விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு - 0777277009

-----------------------------------------



## வேலை வாய்ப்பு

தமிழ் தட்டச்சு தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலை வாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

-----------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாய பண்ணைக்கு தங்கி நின்று வேலைசெய்யகூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும். தொடர்புகளுக்கு - 0766482303

-----------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்கிவிப்பு கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

-----------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு 0767403814

-----------------------------------------

நாட்டின் பல பாகத்தில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலை வாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம்வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு. தொடர்புகளுக்கு 0777299386

-----------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள Software and Web Developement நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை onlinew4u@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (மின்னஞ்சலின் subject இல் Software and Web Developement குறிப்பிட்டு அனுப்பவும்)

-----------------------------------------

யாழில் இருந்து வெளிவரும் தினசரி பத்திரிகைக்கு ஒன்றிற்கு ஒப்புநோக்குநர் (Proof Reader) தேவை. தமிழில் புலமையும் தெளிவான கண்பார்வையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பகல் மற்றும் இரவு வேலைகள் உள்ளன. உங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டிய முகவரி - 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

-----------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் IT நிறுவனத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் (Office Admin) வேலைவாய்ப்பு உள்ளது. அடிப்படை ஆங்கில, கணினி அறிவு அவசியமானது. தொடர்புகளுக்கு 0777113333


-----------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் (Advertisement Collector) முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுவழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

-----------------------------------------

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. light vehicle driving license - B, C, G1 சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு 0770684905

-----------------------------------------



## காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வன விலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும். தொடர்புகளுக்கு 0777435557

-----------------------------------------

A9 வீதியில் இருந்து 1 km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

## FOR SALE விற்பனைக்கு

பழமையான (Antique) கார் பிரியர்களுக்கான Austin Cambridge A55 கார் விற்பனைக்கு உண்டு. திருத்த வேலைகள் உள்ளன. சரியான ஆவணங்கள் உண்டு. தொடர்புகளுக்கு 0777740413

-----------------------------------------

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு 0764438620

-----------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஷ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 5 - 7 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

-----------------------------------------

4TB முதல் 18TB வரையான Hard Disk யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு. Video Editing மற்றும் CCTV Camera storage போன்ற தேவைகளுக்கு உகந்தது. 6TB Sea Gate hard disk - Rs34,000, 4TB TOSHIBA hard disk - Rs23,000, 4TB WD Purple hard disk - Rs21,000, 18TB WD Element external hard disk - Rs90,000, 8TB WD My book external hard disk - Rs60,000, 8TB Seagate hard disk - Rs61,000. தொடர்புகளுக்கு 0762399874

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை – சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி – tamilseconomy@gmail.com
076 443 8620

## இலவச இதழ்....

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
| --- | --- |
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
| --- | --- |
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருணமியம் இலவச இதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

021 431 5287 | 076 44 38 620

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்முற்றம்

**05-02-2023 முதல் புதிய இடத்தில்**

**551, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு எதிரில்

## உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை

- பனைசார் உற்பத்திப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- இயற்கை விவசாய மரக்கறிகள்
- இயற்கை விவசாய இடுபொருட்கள்
- வீட்டுத்ததோட்ட மரக்கன்றுகள்
- இயற்கை உரங்கள்
- கைவினைப் பொருட்கள்
- மட்பாண்டம்
- பாதணிகள்
- உலர் உணவுப் பொருட்கள்
- கடல் உணவுப் பொருட்கள்
- இரசாயணமற்ற ஆரோக்கிய பானங்கள்
- ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள்
- சித்திரங்கள்
- பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)

076 443 8620

**உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்**

## தமிழரும் பொருண்மியமும்

தமிழர்களின் பண்டிகையான தைப்பொங்கல் தினத்தில் தமிழர் பொருண்மியம் உங்கள் கரங்களில் தவழ்கிறது. தமிழர்களின் வாழ்வியலுடன், அவர்களுடைய பொருளாதாரத்துடன் பொங்கலுக்குள்ள தொடர்பு பிரிக்க முடியாதது. இது இயற்கையுடனும் தொடர்புபட்டது. இவ்வாறான ஒரு தினத்தில் தமிழர் பொருண்மியம் உங்களுடன் இணைந்து இந்த பயணத்தை ஆரம்பிக்கிறது.

நெல் அறுவடை, கால்நடைகளைப் போற்றுவது என்பவற்றுடன் பழையவற்றை கழித்து புதியனவற்றை ஏற்றுக் கொள்வதுதான் பொங்கலின் முக்கியத்துவம். அதனால் தான் தை பிறந்தால் வழிபிறக்கும் என்று எமது முன்னோர்கள் சொல்வார்கள். இந்த தைத்திருநாளில் தமிழர்களுடைய பொருளாதாரத்துக்கு ஊடகம் மூலமாக தனது பங்களிப்பை வழங்குவதற்காக தமிழர் பொருண்மியம் உங்களை நாடி வருகின்றது.

நிலவளம், கடல்வளம் என இயற்கை வளங்களை தாராளமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள், அவற்றை முழுமையாக பயன்படுத்த முடியாமைக்கு காரணங்கள் உள்ளன. இதில் அரசியல், இராணுவ ஆக்கிரமிப்பு போன்றனவும் பிரதானமாக இருந்தாலும், அவற்றையும் தாண்டி எமது மக்கள் கவனம் செலுத்த வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தொழில் மயமாக்கலும் முக்கியம். நாம் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களில் அதுவும் ஒன்று. இவற்றுக்கு புலம்பெயர்ந்த எம்மவர்கள் செய்யக்கூடிய பங்களிப்பும் பலமானதாக இருக்கும்.

கொரோனா பெருந் தொற்று நாட்டை முடக்கிப்போட்ட காலத்தில் வீட்டுத் தோட்டம் குறித்தும், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்தும் நாம் கவனத்தை செலுத்தினோம். கொரோனாவைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடி நாட்டை முடக்கிய வேளையில், அதனை எதிர்கொள்ள எம்மால் ஓரளவுக்கு முடிந்தமைக்கு நாம் உருவாக்கிய இந்த சுயதேவையை நிறைவு செய்யக்கூடிய விவசாய – பொருளாதார முறைகள் ஓரளவுக்காவது காரணமாக இருந்தது.


ஆனால், இவை போதுமானவையாக இல்லை. மோசமடைந்து செல்லும் பொருளாதார நெருக்கடி அதை உணர்த்துகின்றது. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் புதிய பாடங்களை நாம் படித்துக்கொள்ள வேண்டும்.

பொருளாதாரத்தில் பலமாக இருப்பதும், சுயதேவைப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதும் தமிழர்களுக்கு வளத்தைக்கொடுக்கும். எமது எதிர்கால இருப்புக்கு பலத்தைக்கொடுக்கும்!

இதுபோன்ற தமிழர்களின் பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளிலும் "தமிழர் பொருண்மியம்" தனது கவனத்தை செலுத்தும்.

இன்று உங்களுடைய கரங்களில் தவழும் "தமிழர் பொருண்மியம்" இதற்கான தனது பங்களிப்பை வழங்கும். உங்களுடைய ஆதரவும், பங்களிப்பும் நிச்சயமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் எமது பயணத்தை ஆரம்பிக்கிறோம்.

# பனை வளத்தைப் பாதுகாக்க புதிய பொறிமுறைகள் தேவை



Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம்பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும்.

இலகுவில் ஏமாறக்கூடிய மனம்படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனை மரங்கள் அமெரிக்கா தேசத்திலே வளருபவையாக இருந்திருந்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந் திருக்கும்.

கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். நுங்குகளின் மகத்துவம் பேசப்பட்டிருக்கும். ஒடியல், புழுக்கொடியல், மாவகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும்.



ஆனால் பாவம் இந்தப் பனைமரங்கள் பாவப்பட்ட எம்மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது. பானங்களிலே அதிகூடிய புரதச் செறிவுடைய பானம் நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால் தான் புரதச் செறிவுடைய பானம் என்று நினைத்துக் கொள் கிறோம். 100g பாலிலே 3.3g புரதம் இருக் கிறது. ஆனால் 100g நுங்கிலே 10.8g புரதம் இருக்கிறது. பாலினைப்போல் 3 மடங்கு புரதச்செறிவுள்ள பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம். நுங்கினுடைய உலர்நிறையிலே 60% புரதமும் 30% மாப்பொருளும் இருப்பதுடன் மிகக்குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப்படுகிறது. பனங்கூடல்களுக்குள் வசிக்கும் எமது சிறார்கள் புரதக் குறை ட்டினால் அவதியுறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த நுங்கின் மகத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை.

எம்மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் 5 வீதமான பனம்பழங்கள் கூட உபயோகப் படுத்தப்படுவதில்லை. வண்டுகளிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.

புரதச்சத்தது நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம்பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக்கொண்டிருக்கின்றன.

பனம்பழங்களின் உலர்நிறையில் 11 வீதம் புரதமும் பெருமளவு பீட்டா (B) கரோட்டினும் ஏனைய விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப் பனம் பழங்களை மக்கள் விரும்பி உண்ணக் கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீடாக பனம் பழங்களிலிருந்து பல வகையான சுவையான பானங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனங்களி சேர்த்து சமைப்பதன் மூலம் அவற்றின் சுவையும் நிறமும் ஊட்டச்சத்தும் மெருகு பெறும் என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பனங்களிகளை இலகுவில் பிரித்தெடுப்பது, பாதுகாக்கும் பொறிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்.

பனம்பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புத் தன்மையும் விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின் நாம் பனம் பழங்களை ஈய உறைகளில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

பலவிதமான விளம்பர யுத்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் ஓட்ஸ் வகைகள் எமது அன்றாட உணவுகளில் ஒன்றாக மாறும் நிலை காணப்படுகிறது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் ஓட்ஸி லும் சிறந்த அதிக நார்த்தன்மை கொண்ட மலிவான இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம். பனங் கிழங்குகள் அதிகளவு நார்த்தன்மையும் மிகக்குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப்பதுடன் உலர்நிறையில் 12 வீத புரதத்தையும் பல விற்ற மின்கள் கனியுப்புக்களையும் கொண்டிருக்கின்றன.

பனங்கிழங்குகளில் இருக்கும் மாப் பொருளானது குறைந்த வேகத்திலே உடலினுள்அ கத்துறிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாக காணப்படுகின்றது. பனம்பழங்களின் பயன்கள்அனைத்தையும் எடுத்த பின்பு அதன் கொட்டைகளை பனம் பாத்தி போடுவதன் மூலம் பனங்கிழங்குகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும். அத்துடன் பனங்கிழங்குகளை பதப்படுத்தி பனங்கிழங்குகளாகவே பாதுகாக்கும் பொறி முறை கண்டறியப்பட வேண்டும்.



# பொருளாதார பார்வையில் காலநிலை மாற்றம்

- அ.ராஜன் -

**பெட்ரோல், டீசல், நிலக்கரி பயன்பாட்டை குறைத்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் நிலையில், அதுசார்ந்த துறை நிறுவனங்களில் சர்வதேச முதலீடுகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

மனிதகுலத்துக்கு காலநிலை மாற்றம் என்பது மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இது உயிர், உடமைகளுக்கு மட்டுமின்றி ஒரு நாட்டின் பொருளாதாரத்தையே ஆட்டம் காண செய்யும் வல்லமைமிக்கதாக உருவெடுத்து வருகிறது. பயிர் விளைச்சல் குறைதல், நோய் பரவுதல் மற்றும் கடல் மட்டம் உயர்தல், கடலோர நகரங்கள் அழிதல், உயரும் வெப்பநிலை ஆகியவை 2050 ஆம் ஆண்டு வாக்கில் உலகளாவிய செல்வத்தை கணிசமாகக் குறைக்கும் என்று சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சுவிஸ் ரீ இன்சூரன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம் 2050 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தை 23 லட்சம் கோடி டொலர் அளவுக்கு குறைக்கலாம் என்பது அதன் மதிப்பீடாக உள்ளது. காலநிலை மாற்றத்தின் தீவிரத்தை உணர்ந்து போதிய நடவடிக்கை எடுக்காததால் அடுத்த 50 ஆண்டுகளில் அமெரிக்கா 14.5 லட்சம்கோடி டொலர் பொருளாதார இழப்பைச் சந்திக்க வாய்ப்புள்ளதாக டெலாய்ட் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தின் விளைவாக அடுத்த 50 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 9 லட்சம் வேலைவாய்ப்புகள் பறிபோக வாய்ப்பிருப்பதாக டெலாய்ட் எச்சரித்துள்ளது. ஒட்டுமொத்த அளவில் காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் 2050 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார உற்பத்தியில் 11 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் தீவிரத்தை உணர்ந்தே ஐக்கிய நாடுகள் அமைப்பு காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்ஒரு பகுதியாகவே தேர்வு செய்யப்பட்ட ஒரு நாட்டில் ஆண்டுதோறும் காலநிலை மாநாடு (காப்) நடத்தப்பட்டு வருகிறது.ஜேர்மனியின் பெர்லின் நகரில் முதல் காலநிலை மாநாடு 1995-ம் ஆண்டு நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக காப் 27 மாநாடு அண்மையில் எகிப்தில் நடைபெற்றது.

உலக வெப்பநிலை உயர்வைக் கட்டுப்படுத்துவதிலும், காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தாக்கங்களுக்கு ஏற்ப கொள்கைகளை வரையறுப்பதிலும் உலக நாடுகள் இணைந்து செயல்திட்டத்தை வகுக்க இந்த மாநாடு உதவுகிறது. ஏனெனில், காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவது என்பது ஒரு நாட்டின் முயற்சியால் ஏற்படக்கூடியதல்ல. ஊர்கூடி தேரை இழுப்பதைப்போல் உலகமே ஒன்றுகூடி இதற்குரிய தீர்வை காண வேண்டும்.

வரலாற்று ரீதியில் தொழில்புரட்சிக்கு காரணமான வளர்ச்சியடைந்த நாடுகள்தான் அதிக அளவில் கரியமில வாயுவை வெளியேற்றி வருகின்றன. இதனால், ஆர்டிக் பிரதேசத்தில் உள்ள பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து தீவு நாடுகள் பாதிக்கப்படுவதுடன், திடீர் வெள்ளம், வறட்சி உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகளை வளரும், ஏழை நாடுகள் சந்தித்து வருகின்றன.

இந்தபாதிப்பினை கருத்தில் கொண்டுதான் காலநிலை மாநாட்டு முடிவில் இழப்பீட்டு நிதியத்தை உருவாக்குவதற்கு உறுப்பு நாடுகள் ஒப்புக் கொண்டன. ஆனால், இதற்கு முன்பான மாநாட்டில் பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட வளர்ச்சியடைந்த நாடுகள் வழங்குவதாக கூறிய ரூ.8 லட்சம் கோடியை இன்னும் அவை வழங்கவில்லை என்பது தனிக்கதை.

இந்தச் சூழலில் இம்மாநாட்டில் கரீபியன் நாடுகளில் ஒன்றான பார்படாஸ் அதிபர் மியா மோட்லி பேசுகையில், “பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த வளர்ந்த நாடுகள் வழங்கும் நிதியுதவி கடன் அடிப்படையிலானதாக இருக்ககூடாது. மாறாக அந்த அணுகுமுறை மானிய அடிப்படையிலானதாக இருக்க வேண்டும்” என்ற தனது எண்ணத்தை வெளிப்படையாக தெரிவித்தார்.

இந்த நிலையில், காலநிலை மாற்றத்தின் பல்வேறு தாக்கங்களை சமாளிக்க பணக்கார நாடுகள் 2020-ல் 2,900 கோடி டொலரை மட்டுமே ஒட்டுமொத்த உலக நாடுகளுக்கும் இழப்பீடாக அளிக்க முன்வந்தது. அதிகமான தொழிற்சாலையால் அதிக வருமானம் ஈட்டும் நாடுகள் பருவநிலை மாற்ற பாதிப்புகளால் ஏற்படும் சேதத்தை கணிசமாக ஈடு செய்ய வேண்டும்” என்றார். இவ்வாறு ஒவ்வொரு நாடும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் குறித்து அச்சம் கொள்ளத் தொடங்கியுள்ளன.

காலநிலை மாற்றத்துக்கு முக்கிய காரணமான கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்த வேண்டுமானால், புதைபடிவ எரிபொருள்களின் பயன்பாட்டை குறைத்தாக வேண்டும். முந்தைய காலநிலை மாநாடுகளில் பெட்ரோல், டீசல், நிலக்கரி பயன்பாட்டை குறைக்கஅமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் ஒப்புக்கொண்ட போதும் அதனை தீவிரமாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வளர்ந்த நாடுகள் மீது இன்றளவும் உள்ளது.

உலக வெப்பமயமாதல் என்பது வளரும் நாடுகளுக்கும், ஏழ்மையான நாடுகளுக்கும் பொது எதிரியாக மாறியுள்ளது. இதனால், உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகளை மாற்றியமைக்கும் திறன்சம்பந்தப்பட்ட நாடுகளிடம் இல்லையெனில் அது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்துவதாக இருக்கும்.

பெட்ரோல், டீசல், நிலக்கரி பயன்பாட்டை குறைத்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் நிலையில், அதுசார்ந்த துறை நிறுவனங்களில் சர்வதேச முதலீடுகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது, இந்தியா போன்ற வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புகள் உருவாவதற்கும் நல்லவாய்ப்பாக அமையும் என்பது வல்லுநர்களின் கருத்து.

சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மின்சார வாகனங்களுக்கு மாற வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் நன்மை கருதி பெட்ரோல், டீசலில் இயங்கும் 15 ஆண்டுகால பழைய வாகனங்களுக்கு முடிவுகட்ட சில நாடுகள் ஒறுதியாகவுள்ளன. இதற்கு மாற்றாக, எத்தனால், சிஎன்ஜி, எலக்ட்ரிக் வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், வாகனத்துறை உத்வேகம் பெறும் என்பதுடன் இந்த துறையில் புதிய வேலைவாய்ப்புகளும், முதலீடுகளும் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இயற்கையில் ஏற்படும் பாதிப்புகளை எத்தனை கோடி டொலர் கொட்டிக் கொடுத்தாலும் சரி செய்ய இயலாது. எனவே, ஒவ்வொரு நாடும் பருவநிலை மாற்றத்தின் தீவிரத்தை உணர்ந்து அப்பிரச்சினைக்கு அடிப்படையான காரணிகளை ஆராய்ந்து அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதே சரியான தீர்வாக அமையும்.

முன்னோர்கள் நமது கைகளில் ஒப்படைத்த பசுமை உலகத்தை நாளைய தலைமுறையின் கைகளில் எந்தவித சேதாரமும் இல்லாமல் ஒப்படைப்பதை நாம் அனைவரும் கடமையாக உணர வேண்டிய கடைசி தருணம் இது.

பெட்ரோல், டீசல், நிலக்கரி பயன்பாட்டை குறைத்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் நிலையில், அதுசார்ந்த துறை நிறுவனங்களில் சர்வதேச முதலீடுகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கோழி வளர்ப்புக்கு தேவையான தீவன மூலப் பொருட்களை அல்லது தீவனத்தை இறக்குமதி செய்ய வேண்டும். இதன்மூலம் உடனடியாக முட்டை விலை குறையும். கோழிப் பண்ணையாளன் பாதிக்கப்படமாட்டான். சுய வாழ்வுப் பொருளாதாரம் என பெயரளவில் சொல்லிக் கொண்டு ஒரு துறையை இறக்குமதிக்கு தள்ளுவது எவ்வளவு பெரிய முரண் ......?**

# முட்டைக்கு என்ன நடக்கிறது



Dr .எஸ்.கிருபானந்தகுமாரன்
(BVSc, MVSC)
கால்நடை வைத்தியர்



இலங்கை அரசு கோழி முட்டையை இறக்குமதி செய்ய முடிவெடுத்துள்ளது. இந்த முடிவு கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் அவற்றை பொருட்படுத்தாமல் இன்றைய திகதியில் அரசு முட்டையை இறக்குமதி செய்வதற்கான கேள்வி மனுக்களை கோரியுள்ளது. இந்த கட்டுரை வெளிவரும் போது சிலவேளை அந்த இறக்குமதி இறுதியாகியிருக்கலாம். சந்தையில் 80 ரூபாய் வரை அதிகரித்துள்ள முட்டையின் விலை சாதாரண மக்களை கடுமையாக பாதித்துள்ளது. பல இடங்களில் முட்டையை பெற முடியாத நிலை உள்ளது. இறைச்சி, கடலுணவுகள், பால், தானிய உணவுகள் மற்றும் மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்புக்கு மத்தியில் இலகுவாகக் கிடைத்திருந்த நிறையுணவான முட்டையின் அதிகரித்த விலை மற்றும் தட்டுப்பாடு மக்களை மேலும் போசணைச் சிக்கலுக்குள் தள்ளியுள்ளது. குறிப்பாக குழந்தைகள், நோயாளிகள், வயதானவர்கள் போசணைக் குறைபாட்டுக்குள் தள்ளி விடப் போகிறது. குழந்தைகளின் போசணை மற்றும் வளர்ச்சிக் குறைபாடு ஆரோக்கியமற்ற எதிர்கால சந்ததியை தோற்றுவிக்கப்போகிறது. இந்த பாரதூரமான நிலைமை இலங்கையில் எப்படி ஏற்பட்டது என்பதைப் பாப்போம்.இந்த முட்டை இறக்குமதி எவ்வாறு கோழிப் பண்ணைத் துறையை பாதிக்கப் போகின்றது என்பதையும் ஏன் பெரும்பாலான கால்நடை வைத்தியர்கள், முட்டை உற்பத்தியாளர்கள், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினர் போன்றோர் இதனை எதிர்கின்றனர் என சகல விடயங்களையும் இந்த கட்டுரை ஆராய்கிறது

இலங்கையில் நாளொன்றுக்கு ஏழு மில்லியன் வரை காணப்பட்ட முட்டை உற்பத்தி நான்கு மில்லியனுக்கும் குறைந்துள்ளது. இன்னும் குறையலாம். பொதுவாக கிறிஸ்மஸ் மற்றும் ஆங்கில வருடபிறப்பு உற்சவ காலத்தில் இருபது மில்லியன் வரை முட்டையின் தேவை அதிகரிக்கும் நிலையில், இந்த முறை அந்த தேவை நிறைவு செய்ய முடியாமல் போயிருந்தது.

முட்டையை மக்கள் நேரடியாக உண்பது பாதிக்கப்பட்ட அதே வேளை கேக் போன்ற முட்டையுடன்தொடர்பு பட்ட பேக்கரிப் பொருட்களும் உற்பத்தி செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. ஏனைய கோதுமை மா சீனி போன்ற மூலப் பொருட்கள், எரிபொருள் செலவு கள் கூடிய நிலையில் முட்டையின் விலை அதி கரிப்பும் அந்த துறையை கணிசமாக பாதிக்கிறது. இந்த துறைதான் அதிகளவு முட்டையை கொள் வனவு செய்கின்ற அதேவேளை அங்கு பணிபுரிவோரையும் நுகர்வோரையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கிறது. இந்த நெருக்கடி இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகள் தமது முடிவை மீள் பரிசீலனை செய்யக் கூட தூண்ட லாம்.

உங்களுக்கு நினைவிருக்கும் கொரோனா காலத்தில் அன்றைய இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஊடாக அறிக்கை மூலம் பத்து ரூபாய்க்கு முட்டை விலையை குறிப்பிட்டிருந்தார். அன்று இலங்கையின் பாரிய கோழிப் பண்ணையாளர்கள் பலர் தமது பண்ணைகளில் விற்க முடியாமல் தேங்கியிருந்த முட்டைகளை பத்து ரூபாய்க்கு வழங்க முடியுமென அவரிடம் தெரிவித்தன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது. ஏனெனில் முட்டையை நீண்டகாலம் வைத்திருக்க முடியாது. பழுதடைந்து விடும். 2020 மார்ச் ஏப்ரல் மாதங்களில் பல வியாபாரிகள் அந்த முட்டைகளை நாடு முழுவதும் வீதி வீதியாக விற்றிருந்த னர். அதாவது ஒன்றரை வருடங்களுக்கு முன் முட்டையின் உற்பத்தி செலவு பத்து ரூபாய்க்கும் குறைவாகவே பாரிய கோழிப் பண்ணைகளில் இருந்தது. நடுத்தர மற்றும் சிறிய பண் ணைகளில் அன்றைய உற்பத்தி செலவு 15 ரூபாய் வரையே இருந்தது. இன்று அப்படியா? வெறும் ஒன்றரை வருடத்தில்,இன்றைய முட்டைகளின்உற்பத்திச்செலவு 55-60 ரூபாக்கும் அதிகமாக இருப்பதை காண முடிகிறது. அதுவும் சிறிய நடுத்தர பண்ணைகளில் அவர்களின் நிலையான செலவுகள், அதிகரித்த வேலையாள் கூலி போன்றவற்றைசேர்த்து வைத்து கணித்தால் இன் னும் அதிகமாக விலை வரும். நுகர்வோருக்கு முட்டைகளின் விநியோக செலவு, இலாபம் என சகலதையும் வைத்துப் பார்த்தால் இன்னும் அதிகமாக வருவதாகவே உணர முடிகிறது.

இலங்கை முட்டை உற்பத்தியில் தன்னிறைவு கண்டிருந்த நாடு. எனினும் கடந்த சில வருடங்களில் நாட்டில் ஏற்பட்டிருகின்ற பொருளாதார நெருக்கடியின் காரணமாக இன்று கோழிப் பண்ணைத் துறை பாதிக்கப்பட்டு முட்டையினை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முட்டை விலை அதிகரிப்பதற் குரிய அடிப்படைக் காரணிகளை தீர்திருந்தாலே முட்டை விலை குறைந் திருக்கும் என்ற நிலையில் முட்டையை இறக்குமதி செய்வதன் மூலம் இந்த சிக்கலை மேலும் அதிகரிக்க போகிறது. இதன் காரணமாக மில்லியன் கணக் கான கோழி வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் நஷ்டமடைந்து பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது..

முட்டை விலையை தீர்மானிப்பதில் எழுபது வீதம் வரை கோழித் தீவனமே செல்வாக்கு செலுத்துகிறது. முக்கியமான கோழித் தீவன மூலப் பொருட்களாக சோயா, சோளம் என்பன அமைகின்றன. நாடு சாதாரண நிலையில் இருப்பதாக கருதினால் பெரும்பாலான சோயாவும் குறிப்பிட்டளவு சோளமும் இறக்குமதி செய்யப்

படும்.

உள்நாட்டில் சோளம் பயிரிடத்தக்க பயிர் என்பதால் பெரும்பாலான சோளம் உள்நாட்டு உற்பத்தி மூலமே கிடைத்திருந்தது. சில வருடங்களுக்கு முன் ஏற்பட்டிருந்த படை புழுத் [Army worm] தாக்கம் மற்றும் அண்மையில் கடந்த ஜனதிபதி இரசாயன உரப் பாவனையை நிறுத்தியமை மற்றும் ஏனைய செலவுகளின் அதிகரிப்பு காரண மாக சோளத்தின் உள்நாட்டு உற்பத்தி அதற்கு முந்தியதை விட அரைவாசியை குறைந்திருந்தது. மேலும் வெளிநாட்டு பணக் கையிருப்பு குறைவு காரணமாக இறக்குமதி செய்யும் சோளம் சோயா மற்றும் ஏனைய தேவையான அமினோ அமிலங் கள், மருந்துகள், தீவனத்தில் சேர்க்கும் ஏனைய மூலப் பொருட்களின் இறக்குமதி குறைந்து விலையும் அதிகரிக்க கோழித் தீவன உற்பத்தி கணிசமாக பாதிக்கப்பட்டது. பல சிறிய கோழித் தீவன நிறுவனங்களின் கையிருப்பில் இருந்த மூலப் பொருட்கள் குறையக் குறைய உள்நாட்டில் கிடைக்க தக்க மாற்று மூலப் பொருட்களை அவை நாடத் தொடங்கினர். குறிப்பாக சோளத்துக்கு பதில் அரிசி மற்றும் தவிட்டை அதிகம் பாவிக்க தொடங்கினர். சோயாவுக்கு பதில் மீன் உணவுகள், புண்ணாக்கு போன்ற வற்றின் அதிகம் சேர்த்திருந்தனர். இடை யிடையே கோதுமைத் தவிடும் மாற்றாக பயன்படுத்தப் பட்டிருந்தது. தீவனத்தில் சேர்க்கும் தேவையான அமினோ அமி லங்கள், மருந்துகள், அமிலமாகிகள், நச்சு உறிஞ்சிகள் என முக்கியமான சேர்வைகள் இறக்குமதி செய்யப்படும் நிலையில் அவற்றை சேர்க்காமலே தீவனம் உற்பத்தியாக தொடங் கியது.






பொதுவாக சோளம் சோயா போன்ற மூலப் பொருட்கள் பாவித்து தயாரிக்கப் படும் தீவனம் கோழிகளுக்கு சுவையானதாகவும் விரும்பி உண்ணத்தக்க வகையில் அமைவதோடு வளர்ச்சி மற்றும் உற்பத்தியை சீராக தரக் கூடியது. இதனை பல கள ஆய்வுகள் உறுதிப் படுத்தியிருந்த நிலையில் உள்நாட்டில் தயா ரிக்கபடும் மாற்று மூலப் பொருட்கள் மூலம் உற் பத்தியாகும் தீவனம் சுவை குறைந்ததாகவும் தரம் குறைந்ததாகவும் அமைந்திருந்தது. பல கோழிகள் அவற்றை உண்பதை தவிர்த்தி ருந்தன. வளர்ச்சி பாதிக்கப்பட்டது. முட்டை உற்பத்தி குறைவடையத் தொடங்கியது. இலகு வில் அவை நோய்ப்பட்டு இறந்தன. அதாவது அதிக விலையில் தரம் குறைந்த தீவனத்தை கோழிப் பண்ணையாளர்கள் வாங்க வேண்டி யிருந்தது. அரிசியை விலங்கு உணவுக்கு பயன் படுத்த முடியாது எனும் வர்த்தமானி அறிவிப் பையும் அரசு வெளியிட இந்த நிலை மேலும் உக்கிரமடைந்து பல சிறிய கோழித் தீவன உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி நிறுத்தியுள் ளனர். ஒரு சில பாரிய உற்பத்தியாளர்கள் தமது கையிருப்பில் உள்ள மூலபொருட்களை கொண்டு தீவனத்தை தயாரித்து அதிக விலையில் வழங்கி யிருந்த போதும் ஒரு கட்டத்தில் நிலைமையை அவர்களாலும் கட்டுப்படுத்த முடியாது தமது கோழி களை வாங்கும் பண்ணையாளருக்கு மட்டும் தீவனத்தை கொடுக்கத் தொடங்கியிருந்தனர். ஒவ்வொரு வாரமும் கணிசமாக விலை அதிகரிக்க பல பண்ணையாளர்கள் கோழி வளர்ப்பை கைவிடும் நிலை தோன்றியது. நீங்கள் சரியாக நினைவுபடுத்திப் பாருங்கள் கொஞ்சம் கொஞ்சமாக முட்டையின் விலை மற்றும் கோழி இறைச்சி யின் விலை அதிகரித்ததை. இதுதான பிரதான காரணம்.

கோழிப் பண்ணையாளர்களும், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் சோளம் சோயா போன்ற முக்கிய மூலப் பொருட்களை உடனடியாக இறக்குமதி செய்யும் படி பல மாதங்க ளாக அரசிடம் தொடர்ந்து வலியுறுத்திய போதும் அரசால் அதனை செய்ய முடியவில்லை. குறை வடைந்த டொலர் கையிருப்பை காரணமாக சொல் லியிருந்தது. சில தடவைகளில் சிறிய அளவுகளில் சோளத்தை இறக்குமதி செய்த போதும் அது யானைப் பசிக்கு சோளப் பொறியை கொடுத்தது போன்றே அமைந்திருந்தது. இன்று முட்டையை இறக்குமதி செய்வதற்கு பதிலாக தீவன மூலப் பொருட்களை இறக்கி யிருந்தால் கோழிப் பண்ணையாளரும் கோழித் தீவன உற்பத்தியாளரும் பாதிக் கப்பட்டிருக்க மாட்டார்கள். நுகர்வோருக் கும் குறைந்த விலையில் தொடர்ச்சியான முட்டை கிடைத்திருக்கும்.



அண்மையில் அரச கால்நடை வைத் தியர் சங்கம் பறவைக் காய்ச்சல், Avian influenza] உள்ள நாடுகளில் இருந்து முட்டையை இறக்குமதி செய்வதன் ஆபத்தை தெளிவு படுத்திருந்தார். பிரித் தானியா போன்ற பல நாடுகளில் பறவைக் காய்ச்சல் காரணமாக முட்டை உற்பத்தி கடுமையாக குறைந்து நுகர்வோர் உண வுக்கு முட்டையின்றி தவிப்பதை அறிய முடிகிறது. இந்தியாவின் பல மாநிலங் களில் பறவைக் காய்ச்சல் நோய் அவதா னிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை இந்தியாவிடம் முட்டையை இந்திய கடன் அடிப்படையில் கொள்வனவு செய்ய முயல்கிறது. சில தினங்களுக்கு முன் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளரும் இந்த மாதி ரியான ஆபத்தான இறக்குமதியை நிறுத் தச் சொல்லியும் நோய் காணப்படாத நாடு களில் இருந்து இறக்குமதி செய்யவும் அறிவுறுத்தியிருந்தார். இப்படி ஒரு நிலை யில் அரசு அதற்காக பொருத்தமான நாடு களை தெரிவு செய்ய வேண்டி ஏற்படுகிறது. அது பாரிய நிதியை செலவு செய்ய வேண்டி ஏற்படும்.

முட்டை உற்பத்தித் தொழில் இருக்கும் பலர் தமது முட்டை இடத்தக்க கோழிகளை வளர்ப்பது இன்றைய நிலையில் நட்டத்தை தருவதால் இறைச்சிக்கு விற்கத் தொடங்கி யுள்ளனர், டொலர் கையிருப்பு இல்லாததால் வெளி நாடு களில் இருந்து தாய்க் கோழிகளை [parents birds] இறக்குவதும் கணிசமாக குறைந்துள்ளது. தீவன விலை நாளுக்கு நாள் கூடியுள்ளது. பல சிறிய மற்றும் நடுத்தர பண்ணையாளர்கள் ஏற்கனவே கோழி வளர்ப்பை கை விட்டுள்ள னர். இன்று பாரிய பண்ணையாளர்களும் கோடிக் கணக்கான பெறுமதியுடைய தமது பண்ணைகளை மூடும் நிலைக்கு வந்துள் ளனர். இந்த நிலையில் அவர்களை தொழிலில் இருந்து விலகாமல் காக்கும் நடவடிக்கையை செய்யாமல் இந்த அரசு முட்டைகளை இறக்குமதி செய்வது தவறான நடவடிக்கையே. ஒரு துறையை கட்டி எழுப்புவது மிகவும் கடினமா னது. அதனை அழிய விட்டு மீள யோசிப்பது மிக சிரமமானது. தன்னிறைவு கண் டிருந்த கோழி முட்டை உற்பத்தியும் பாலுக்கு நடந்தது போல இனி இறக்குமதியில் தங்கியி ருக்கும் நிலைக்கு வந்துள்ளது. பல பில்லியன் பணத்தை வெளி நாடுகளுக்கு கொடுக்கப் போகிறோம். அதுவும் பறவைக் காய்ச்சல் போன்ற நோய் கள் தோன்றக் கூடிய வாய்ப்புடன். இப்போதும் காலம் இருக்கிறது. கோழி வளர்ப்புக்கு தேவை யான தீவன மூலப் பொருட்களை அல்லது தீவனத்தை இறக்குமதி செய்ய வேண்டும். உடனடியாக முட்டை விலை குறையும். கோழிப் பண்ணையாளன் பாதிக்கப்படமாட்டான். சுய வாழ்வுப் பொருளாதாரம் என பெயரளவில் சொல்லிக் கொண்டு ஒரு துறையை இறக்கு மதிக்கு தள்ளுவது எவ்வளவு பெரிய முரண் ......?


# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

**கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்**

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

**15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!**

**சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்**



## அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

**பேர்ச் 200,000/- (USD 550)**

**பரப்பு 20 இலட்சம் (USD 5,500)**

5th Project

இது ஒரு **கற்பகவனம்** செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

*இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
















4th Project

இது ஒரு
**கற்பகவனம்** செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



**தொடர்புகளுக்கு: 0777 43 5557**



- வேதநாயகம் தபேந்திரன் -

# 0 விலிருந்து ஹீரோ ஆகலாம்

சுயதொழில் என்றவுடன் எம்மில் பலர் நினைப்பது தொழில் தொடங்க சில இலட்சங்கள் அல்லது பல இலட்ச தேவை.
உண்மையான சுயதொழில் அப்படியல்ல. ஓரிரு ஆயிரம் ரூபாக்களோ அல்லது பல ஆயிரம் ரூபாவோ போதும்.

எனது கண்ணுக்கு முன்பாகவே உருவாகி வளர்ந்து உயர்ந்த சுயதொழில் ஒன்று தொடர்பான அவதானத்தைத் தருகிறேன். உழைப்பு எப்போதும் உயர்வைத் தரும்.

யாழ் கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள எபிரோன் மிக்சர் நிறுவனம் இன்று பிரமாண்டமானதொரு நிறுவனமாக உருவாகி உயர்ந்துள்ளது.

1991 ஆம் ஆண்டு. நான் அரியாலையிலுள்ள எனது நண்பர்களுடன் மாலைப் பொழுதைக் கழித்து விட்டு வருவேன். அப்போது தற்போது எபிரோன் மிக்சர் நிறுவனம் உள்ள வீட்டில் ஆண் ஒருவர் கண்ணாடிப் பெட்டி ஒன்றில் மிக்சர்,கச்சான் பருப்பு, பகோடா ஆகியவற்றுடன் வீதியோரம் விற்பனையில் இருப்பார்.

ஐந்து ரூபா கொடுப்போம். மிகவும் சுவையான தரமான மிக்சர் கிடைக்கும். நாம் பங்கிட்டு உண்போம்.




குடும்ப உழைப்பாக இத் தொழிலில் ஈடுபட்டு மெல்ல வளர்ந்தார்கள். சில வருடங்களுக்கு முன்பாகப் 10 ரூபாவுக்குப் பற்றிஸ் விற்பனையில் ஈடுபட்டார்கள்.

அந்த விலைக்கு, அந்தளவு தரத்துக்குப் பற்றிஸ் விற்க முடியுமாவென நான் அதிசயப்பட்டேன்.

ஆனால் அவர்கள் குடும்பமாகச் சேர்ந்து உழைத்துச் சிறியதொரு இலாபம் வைத்துப் பெரும் எண்ணிக்கையில் விற்பதன் மூலமாக நியாயமான இலாபத்தைப் பெற்றார்கள். வியாபாரத்தை மேலும் விரிவாக்கிக் கொண்டார்கள்.


தற்போது காலையிலிருந்து இரவு வரையில் இவர்களது வியாபார நிலையம் திறந்து விற்பனை நடக்கிறது.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியிலும் பெரியதொரு கடை இருக்கிறது. சொந்த வாகனங்கள் மூலமாக யாழ்ப்பாணம் எங்கும் விற்பனை செய்கிறார்கள்.

இவர்கள் வியாபாரத்தில் போர்க்காலம், இடம் பெயர்வுகள் எல்லாவற்றையும் தாண்டி உயர்ந்துள்ளார்கள்.

இவர்களது வெற்றி தொடர்பான எனது அவதானிப்புகள்.







01.பொருளின் தரம்.நிரந்தரம்

02. வாடிக்கையாளர் விரும்பக் கூடிய விலை.தாமதமில்லாத சேவை.

03. அர்ப்பணிப்பும் ஒற்றுமையுமுள்ள குடும்ப உழைப்பு.

04. விற்பனை இயலளவு தெரிந்து உற்பத்திகளைச் செய்தல்.

05. வருமானத்தை மிகவும் சிக்கனமாகச் செலவழித்துச் சேமித்தல்.

06. சேமிப்பை மீண்டும் மீண்டும் வியாபாரத்தில் ஈடுபடுத்துதல்.

07. காலத்துக்குக் காலம் சிற்றுண்டிகளைப் புத்தாக்க ரீதியாக உருவாக்குதல்.




08. தங்களது தொழில் இயலளவு தெரிந்து வங்கிக் கடன்களைப் பெறுதல்.

எனது அனுபவத்தில் இவ்வாறு உழைப்பில் முன்னேறிய பலரை எனக்குத் தெரியும். இன்று அவர்கள் பெரிய வர்த்தகர்களாக இருந்தாலும் ஒரு காலத்தில் மிகச் சிறிய அளவில் தங்களது தொழில்களை ஆரம்பித்தவர்கள்தான்.

அதேபோல வியாபாரத்தில் அதிக இலாபம் ஈட்டும்போது அகலக்கால் வைத்து காணமல் போனவர்களும் பல பேர். வியாபாரங்கள் ஏற்றங்களும் இறக்கங்களும் நிறைந்தவை. ஏற்றத்தில் இருக்கும்போது நிச்சயமாக இறக்கங்கள் குறித்து சிந்தித்து அதற்கான தயார்படுத்தல்களுடன் இருக்க வேண்டும். ஒரு வியாபாரம் சரிவைச் சந்திக்கிறது என்று உணரும்போது மாற்று உத்திகளைப் பயன் படுத்த வேண்டும். அல்லது அந்த

வியாபாரத்தைக் கைவிட்டு மாற்று வியாபாரத்தில் கால் பதிக்க வேண்டும். ஆகக் குறைந்தது அடுத்து வரும் மூன்று வருடத்திற்காவது வியாபாரம் குறித்த எதிர்வு கூறல்களைக் கணித்து அதற்கேற்ப செயல்பட வேண்டும். வெறும் வரட்டு கௌரவத்துடன் நட்டத்தில் செல்லும் வியாபாரத்தை தொடர்ந்தும் இயக்கினால் அடையாளம் தெரியாமல் செல்லப் போவது நிச்சயம்.

ஓவர்நைட்டில் ஒபாமா ஆக முடியாது. வியாபாரத்தில் ஸ்திரமான ஒரு நிலையை அடைய பல வருடங்கள் ஆகலாம். அதுவரை பொறுமை வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். இன்று நல்ல நிலையில் உள்ள எந்தவொரு தொழிலதிபரும் திடீர் என்று முளைத்தவர்கள் அல்ல. அதற்காக அவர்கள் பல வருட உழைப்பை கொட்டியிருப்பார்கள். இன்று இளம் வயதில் வியாபாரத்தில் கால்வைப்பவர்கள் எடுத்த எடுப்பிலேயே தாங்கள் பெரிய வர்த்தகர்கள் ஆகிவிட வேண்டும் என்று

நினைப்பதால்தான் அவர்களது வியாபாரங்களுக்கு விரைவிலேயே மூடு விழாக்கள் நடைபெறுகிறது.



வியாபாரத்தில் குறிப்பாக மீட்டர் வட்டிக்கு கடன் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். உங்கள் வியாபாரத்தின் வளர்ச்சியைப் பார்த்து எவராவது மீட்டர் வட்டிக்கு பணம் தருவதாகக் கூறினாலும் விலகிக் கொள்ளுங்கள். வட்டிக்கு பணம் வாங்குவது உங்களுக்குப் பழக்கம் ஆகிவிட்டால் ஒன்று நீங்கள் காலம் முழுவதும் இன்னொருவருக்காக உழைக்க வேண்டி இருக்கும். இல்லாவிட்டால் பார்த்து பார்த்து வளர்த்த உங்கள்

வியாபாரத்தையே கடன் வழங்கியவருக்கு கையளிக்க வேண்டியும் வரலாம்.

வியாபார நிதிகளைக் கையாள்வதில் மிகவும் சிரத்தையாக இருங்கள். கடனுக்கு விற்பனை செய்வதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் கடன்களை அறவீடு செய்வதே உங்களுக்கு பெரும் தலைவலியாக மாறலாம். கடனுக்கு விற்பனை செய்து கடன்களை அறவீடு செய்து கொள்ள முடியாமல் மாண்டு போன வியாபாரங்கள் ஏராளம்.

ஏதாவது வங்கி ஒன்றுடன் நல்லுறவைப் பேணுங்கள். உங்கள் வங்கி நடவடிக்கைகள் நேர்த்தியாக இருந்தால் வங்கிகளே உங்கள் வியாபாரத்திற்கு தேவையான நிதி வசதிகளையும், வியாபார ஆலோசனைகளையும் நியாயமான முறையில் வழங்கும். அனுபவமுள்ள வங்கி உத்தியோகத்தர்களின் அறிவுரைகளுக்கு செவி மடுங்கள்.

மொத்தத்தில் நேர்மையாகவும், கடுமையாகவும் உழைத்தால் வெற்றி நிச்சயம்.



# சண்முகத்தார் ஒரு சங்கதி கேட்டியளோ..?



ஆர் என்ன சொன்னாலும் பெருமளவு விவசாயப் பின்னணியைக் கொண்டதாகவே எமது பிரதேசங்கள் உள்ளது. வளமான மண்ணும் பரந்த நிலமும் கொண்ட காணிகள் எக்கச்சக்கமாக கிடக்கிறது...

அப்படியிருக்க எங்கட சிறுவர்களுக்கு போசனைக் குறைபாடு ஏன் வரவேணும்?

இலாபகரமான சிறு தோட்டச் செய்கையை பற்றி எனது அவதானங்களைச் சொல்லுறன் கேளுங்கோ....உங்கட சாப்பாட்டுக்கோப்பைகளை நீங்களே போசாக்ககானதாக மாற்றுங்கோ...

**01. மிளகாய்ச் செய்கை**

மிகவும் இலாபகரமாகத் திட்டமிடக் கூடியது மிளகாய்ச் செய்கையாகும்.





தூசு எருவை மண்ணின் மேல் இட்டுத் தோட்டத்தை உழுதல் வேண்டும். பின்னர் தண்ணீர் இறைக்கக் கூடியதாக வாய்க்கால், பாத்தி கட்டக் கூடியதாக அளவு செய்து மிளகாய்க் கன்றுகளை நடுதல் வேண்டும்.

கன்றுகளுக்கு கைத் தண்ணீர் ஊற்றி மோட்டார் மூலமாக இறைப்புச் செய்யும் பருவத்தில் நிலத்தைச் சாறிவிட்டு வாய்க்கால்,பாத்திகள் அமைத்தல் வேண்டும்.

பாத்திகள் அமைத்த பின்பாகக் கீரைக் கொட்டைகளைப் பாத்திகளுக்குள் வீசிய பின்பாக தண்ணீர் இறைப்புச் செய்தல் வேண்டும்.

விதை வெங்காயத்தை மிளகாய்க் கன்று பாத்திகளின் வரம்பில், தண்ணீர் வாய்க்கால்களில் ஒவ்வொரு வதையாக ஊன்றி நடல் வேண்டும்.

மிளகாய்த் தோட்டத்தின் எல்லையில் வெண்டி விதை,பயிற்றை விதை, பாகல் விதை போன்றவற்றை நட்டுக் கொள்ளுங்கள். தோட்டத்தின் கரையோரம் இடம் இருந்தால் பூசணி விதைகளை நடுங்கள்.

அவை முளைத்து கொடி விட்டுக் காய்த்துக் கொள்ளும்.

மிளகாய்க் கன்றுகளுக்கு இறைக்கும் நீர் மூலமாக முளைக்கும் கீரைக் கொட்டைகள் 20 முதல் 30 நாள்களில் பயன் தரும். கீரை விற்றுக் காசாக்கலாம்.

வெங்காயம் 50 முதல் 60 நாள்களுக்கிடையில் நன்கு விளைந்து கொள்ளும். வாய்க்கால் புருவத்தில், பாத்திகளில் நடும் வெங்காய விதை நன்கு மூச்சு விட்டு உருண்டு திரண்டு நிறைய விளையும்.

வெண்டி முளைத்து ஒன்றரை மாதத்திற்குப் பின்னர் பயன்தரத் தொடங்கும். அது போல பயிற்றை ,பூசணி போன்றவையும் விளைந்து பயன் கிடைக்கும்.

மளகாய்க் கன்றுகள் வளர்ந்து பச்சை மிளகாய் விற்றல், செத்தல் மிளகாய் விற்றல் மூலமும் வருமானம் கிடைக்கும்.

மிளகாய்த் தோட்டச் செய்கையில் ஒரு தண்ணீர் இறைப்பு மூலமாக மிளகாய், கீரை, வெங்காயம், வெண்டி, பயிற்றை,பாகல், பூசணி ஆகிய பயிர்கள் வளர்ந்து பயன் கிடைக்கும்.

இது தான் ஸ்மார்ட் பயிர்ச் செய்கை. அதாவது ஒரு பயிர் மூலமாகப் பல பயிர்கள் மூலமாக வருமானம் பெறுவதாகும்.

இப்படித் தோட்டம் செய்வதன் மூலமாகத் இலாபமும் எடுக்கலாம்...வயிறாரச்சாப்பிடவும் முடியும்.

அப்ப நான் வாறன் ...



## சேர்ந்தொரு வடம் பிடிப்போம்

**புதியதோர் உலகம் செய்வோம்
புதுமைகள் பரவச்செய்வோம்
அரியதோர் உணவுக்காடு
அவனியில் தோன்றச்செய்வோம்- மழை
நீலவான் கிழித்துப்பெய்யும்
நிலமகள் சிலிர்த்து நிற்பாள்
வாடிய பயிர்களெல்லாம்
வானதேவனையே போற்றும்
களனியில் நெல் செழிக்கும்
கடிதுயர் யாவும் நீங்கும்
பசுவினில் பால் சுரக்கும்
பாடியே களிப்போம் வாரீர்...
மடிநிறை மச்சம் சேரும்
மாவிடை கனிகளாடும்
பொற்றுறை முகமும் சேர
பூமியில் தேனாறு பாயும்
இல்லையென்றிரப்பாரற்ற
இகமதைச்செய்வோம் வாரீர்
வழியது முன்னேயுண்டு
வறுமைகள் எமக்கெதற்கு???
சேர்ந்தொரு வடம் பிடிப்போம்
சிறுமைகள் களைவோம் வாரீர்....!**

ஆத்மிகா ஞானரூபன்

# வருவாயைப் பெற்றுத்தரும் சமூக ஊடகங்களின் வருகை




- பவித்திரன் -

* இதனை எப்படி நாம் பயன்படுத்தலாம்?
* அதிகரிக்கும் புதிய வேலைவாய்ப்புக்கள்
* சமூக ஊடக கல்வியின் முக்கியத்துவம்

சர்வதேச ரீதியாக ஒவ்வோர் ஆண்டும் சமூக வலைத்தளங்களின் வளர்ச்சி அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வெறும் பொழுதுபோக்கு அம்சமாகப் பார்க்கப்பட்ட சமூக வலைத்தளங்கள், இன்று வருவாய் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் அளவுக்குப் பெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. இன்றைய வாழ்க்கையில் தவிர்க்கமுடியாத ஒரு அம்சமாகவும் சமூக ஊடகங்கள் மாறிவிட்டன.

வர்த்த நோக்கத்துடனான சமூக ஊடகங்கள், கல்வி வளர்ச்சி என பல தேவைகளுக்காக இன்று சமூக ஊடகங்களின் பரப்பு விரிவடைந்துகொண்டே செல்கின்றது. இதனால், சமூக ஊடகங்கள் குறித்த கல்வியும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானதாகியிருக்கின்றது.

காணொளிகள் சார்ந்த சமூக வலைத்தளங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. யூடியூப், இன்ஸ்டகிராம், ஃபேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்படும் காணொளிகள் வருவாய் ஈட்டும் வாய்ப்புகளைச் சற்று அதிகமாகவே வழங்கி வருகின்றன. குறிப்பாக இதில் யூடியூப் முன்னிலையில் இருந்துவருகிறது. இதனால், இளைய




தலைமுறையினரது கவனம் அதன்பால் சென்றிருக்கின்றது.

இலங்கையிலும் அண்மைக்காலத்தில் யூடியூப் சனல்களின் தொகை கணிசமாக அதிகரித்திருக்கின்றது. இலங்கையிலுள்ள தமிழர்கள் மட்டுமன்றி, புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரும் யூடியூப் சனல்களை ஆரம்பித்து கணிசமான வருவாயைப் பெற்றுக்கொள்கின்றார்கள். சில யூடியூப் சனல்கள் வெறும் அலட்டல்களாகவும், வெறுமனே சலசலப்பை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால், ஆரோக்கியமான சனல்களை உருவாக்குபவர்கள் குறிப்பிட்ட காலத்தில் தமது வாழ்வாதாரத்துக்கு அதுவே போதும் என்ற நிலையில் இருப்பதையும் காணமுடிகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்களத்தில் அரசியல் சார்ந்த விவகாரங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்றன. அதிகளவு பார்வையாளர்களையும் அவை கொண்டுள்ளன.

உலகிலேயே யூடியூப் காணொளிகளுக்கு அதிக பார்வையாளர்கள் இந்தியாவில்தான் இருக்கிறார்கள். 2022 ஏப்ரல் மாத நிலவரப்படி இந்தியாவில் 46.7 கோடி யூடியூப் பார்வையாளர்கள் உள்ளனர். அதற்கு அடுத்த இடத்தில் அமெரிக்கா 24.7 கோடியுடன் உள்ளது. மூன்றாவது இடத்தில் இந்தோனேசியாவில் 13.9 கோடிப் பார்வையாளர்கள் உள்ளனர்.

2021ஆம் ஆண்டில் இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் ரூ.10 ஆயிரம் கோடி அளவுக்கு யூடியூப் பங்களித்திருக்கிறது. மேலும், இந்தியாவில் ஏழரை லட்சம் பேருக்கு முழுநேர வேலைவாய்ப்பையும் வழங்கியிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு கோடி யூடியூப் பார்வையாளர்கள் மட்டுமே இருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. யூடியூபின் வளர்ச்சி ஒவ்வோர் ஆண்டும் ஏறுமுகமாக உள்ள நிலையில், கூகுள் நிறுவனம் யூடியூப் தொடர்பான படிப்புகளை 2023இல் வழங்கப் போவதாக அறிவித்துள்ளது. இப்படிப்புகள் ஜூன் மாதவாக்கில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் 'கூகுள் ஃபார் இந்தியா' நிகழ்ச்சியில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அதில் ஒன்றாக, படிப்புகள் வழங்கப்படும் அறிவிப்பையும் அந்நிறுவனம் வெளியிட்டது. படைப்பாற்றலையும் அதன் பயனர் தளத்தையும் விரிவுபடுத்தும் நோக்கில் இதை கூகுள் நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

யூடியூப் படிப்புகள் இணைய வழியாகவே நடத்தப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படிப்புக்கான பாடங்கள் மின்படிகளாக (பிடிஎஃப், பி.என்.ஜி.) வழங்கப்படும். 'பீட்டா' வடிவிலேயே இப்படிப்புகள் வழங்கப்பட உள்ளன. இந்தியா மட்டுமன்றி அமெரிக்கா, தென் கொரியாவிலும் இந்த ஆண்டில் யூடியூப் படிப்புகள் தொடங்கப்பட உள்ளன.

உலகில் டிஜிற்றல் கற்றல் வெளி மிகப்பெரிய சந்தையாக மாறிவரும் சூழலில் யூடியூப் பயனர்கள் சரியான உள்ளடக்கத்தைப் பெறவும் எளிதான முறையில் தங்களை மேம்படுத்திக்கொள்ளவும் இப்படிப்புகளை வழங்குவதாக 'கூகுள் ஃபார் இந்தியா' தெரிவித்துள்ளது.

பயனர்களின் டிஜிட்டல் திறன்கள், தொழில்முனைவோர், தொழில், தனிப்பட்ட ஆர்வம் ஆகியவற்றை ஆராயும் யூடியூப், பாடநெறிகளுடன் உள்ளடக்கத்தை உருவாக்குபவர்களுக்கு மேலும் பணமாக்குவதற்கான வாய்ப்புகளை வழங்கும் வகையில் படிப்புகளை நடத்த கூகுள் கையில் எடுத்துள்ளது.

ஏற்கனவே Digital Journalism தொடர்பான பாடநெறி ஒன்றை பேஸ்புக் நிறுவனம் பிரபல சர்வதேச செய்தி நிறுவனமான ரோய்ட்டர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றது. இணையத்தளத்தின் மூலமாக இலவசமாக இதனைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் சழங்கப்பட்டிருக்கின்றது. இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கானவர்கள் இதன் மூலம் பலனடைந்துவருகின்றார்கள்.

இளைய தலைமுறையினருக்கு பெருமளவு வேலைவாய்ப்பையும், வருமானத்தையும் ஈட்டித் தரும் வகையில் சமூக ஊடகங்கள் வளர்ச்சியடைந்துவருவதால், அது குறித்த உத்திகளைக் கற்றுக்கொடுப்பதில் பல நிறுவனங்கள் ஆர்வம் காட்டிவருகின்றன. உலகின் போக்கு மாற்றமடைந்துவரும் நிலையில் வேகமான தகவல் தொடர்புகளுக்கு சமூக ஊடகங்கள் வழங்கும் பங்களிப்பு முக்கியமானதாகவும் பெறுமதியானதாகவும் இருப்பதைத்தான் இவை உயர்த்துகின்றன.




யூடியூப் சனல்கள் வெற்றிபெறுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய பல உபாயங்கள் உள்ளன. முதாவதாக கொன்னைற் எனப்படும் உள்ளடக்கம் பார்வையாளர்களைக் கவர்வதாகவும், இலகுவில் அவர்களால் புரிந்துகொள்ளப்படக் கூடிய தாகவும் இருக்க வேண்டும். அதனை வழங்கும் பாணி என பல விடயங்கள் உள்ளன.

இது தொடர்பில் யூடியூப் சனல் ஒன்றை ஆரம்பிக்க விரும்புபவர்களுக்குப் பயனுள்ள பல தகவல்களை - உத்திகளை வரும் வாரங்களில் தமிழர் பொருண்மியம் கொண்டுவரும்.

**நேர்கண்டவர் - பி.பார்த்தீபன்**



# சென்னை – பலாலி இடையிலான விமான, கப்பல் சேவை வடபகுதிக்கு முக்கியமாவது எதற்காக?

## விளக்குகிறார் பொருளாதார ஆய்வாளர் செல்வின்

சென்னைக்கும் பலாலிக்கும் இடையிலான விமான சேவைகள் பலத்த இழுபறிக்கு மத்தியில் மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அறுபது பயணிகளுடன் செல்லக்கூடிய சிறிய ரக வீமானம் ஒன்றே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால், ஒரேயடியாக அதிகளவு பயணிகள் செல்ல முடியாத நிலை உள்ளது. அத்துடன் பொதிகளின் நிறையும் வரையறுக்கப்பட்டதாக உள்ளது. இந்த நிலையில்இ மார்ச் மாதத்திலிருந்து இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் கப்பல் சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இது மிகவும் முக்கியமான ஒரு திருப்பம் என யாழ். வர்த்தகர்கள்தெரிவிக்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில்இ விமான மற்றும் கப்பல் போக்குவரத்துக்களின் மூலமாக வடபகுதியுடன் தென்னிந்தியா இணைக்கப்படுவதன் முக்கியத்துவம் என்ன என பொருளாதார ஆலோசகரான செல்வின் இரெனூஸ் மரியாம் பிள்ளை என்பது தொடர்பில் தமிழர் பொருணமியம் சார்பில் கேள்வி எழுப்பினோம். இதற்கு அவர் வரலாற்று ரீதியான அடிப்படைகளுடன் விரிவான பதில் ஒன்றைத் தந்தார். அவர் தெரிவித்த கருத்துக்கள் இவைதான்

ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் அவர்கள் எழுதிய குறிப்புக்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான ஒன்று 1600 களில் ஒல்லாந்து தனபதி ஒருவர் எழுதிய முக்கியமான குறிப்பு ஒன்று உள்ளது.

அந்தக் காலத்தில் இலங்கைத் தீவின் தொடர்பாடல்கள் அனைத்தும் வடக்கு நோக்கியதாகவே இருந்தது. காங்கேசன்துறை துறைமுகம் போன்வற்றின் ஊடாகத்தான் இந்தியாவுடனும் ஏனைய நாடுகளுடனுமான இலங்கையின் தொடர்பாடல் இருந்தது. காரைநகர் என்று நாம் சொல்வது அப்போது ஒரு தீவாக காரைதீவாக இருந்தது. பின்னர்தான் அந்தப் பாலம் போடப்பட்டது. அந்தப் பாலம் போடப்படுவது தொடர்பாகவும், யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமாக புகையிரதப் பாதைகளை அமைப்பது தொடர்பாகவும் அன்றைய ஆளுநர்கள் கூட முரண்பாடான கருத்துக்களை வைத்திருந்தார்கள்.

வடபகுதியின் பொருளாதாரம் இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளுடனான பொருளாதாரத்தைவிடவும் வேறுபட்டது என்று அவர்கள் கருதினார்கள். அதனை கொழும்பை மையப்படுத்திய ஒரு பொருளாதாரமாக மாற்றக் கூடாது என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தார்கள். வடக்கின் பொருளாதாரம் தனித்துவமான ஒரு பொருளாதாரமாக இருப்பதால் அதனை தெற்குடன் இணைப்பதில் அவர்கள் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள்.






தென்னிலங்கையின் பொருளாதாரத்தை நாம் எடுத்துப் பார்த்தால் அங்கு முன்னர் இருந்தது ஒரு கிராமிய பொருளாதாரம்தான். பின்னர் ஐரோப்பியர்களுடைய குடியேற்றத்தின் பின்னர்தான் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்ற விடயம் வருகின்றது. தெங்குஇ றப்பர், தேயிலை என்ற விடயங்கள் வந்த போது இதனை இலகுவாக ஏற்றுமதி செய்வதற்கானத்தான் மட்டக்கப்பு போன்ற பகுதிகளுக்கு பாதை போடப்பட்டது. கண்டி - பொழும்பு ரயில் பாதைகள் போடப்பட்டது எல்லாம் பொதுமக்களுடைய பாவனைக்காக வல்ல. அவை அனைத்தும் இந்தப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காகத்தான். ஆகஇ ஐரோப்பியகளின் குடியேற்றத்துக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரமாக மாற்றப்பட்டது.

ஆனால்இ வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பொருளாதாரம் விவசாயப் பொருளாதாரமாகவும், மீன்பிடிப் பொருளாதாரமாகவுமாகவே இருந்தது. கைத்தொழில் என்ற ஒரு பொருளாதாரம் கூட இங்கு கட்டமைக்கப்படவில்லை. இந்தப் பின்னணியில்தான் சுதந்திரத்துக்குப் பின்னரும் கூட, வடக்கு கிழக்குப் பகுதிகளில் கைத்தொழில் மயமாக்கல் என்பது மிகவும் வலுவற்றதாகவே காணப்பட்டது. அதனால் வடக்குஇ கிழக்கின் பொருளாதாரம் பலவந்தமாகத்தான் தெற்குடன் கட்டியிணைக்கப்பட்டது. இதன்பின்னர் தெற்கிலிருந்து வருகின்ற உத்தரவுகள் என இது கொழும்பை மையப்படுத்திய ஒரு பொருளாதாரமாக மாற்றப்பட்டது.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக எழுதும் பலரும் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தார்கள். அதாவதுஇ 2009 இல் போர் முடிவுக்கு வரும் வரையில் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை சீனாவுடன் நெருக்கமானதாக இருக்க வேண்டும் என்பது தென்னிலங்கைக்குத் தேவையானதாக இருந்தது. ஏனெனில் யுத்தம் நடைபெறும் போது தமிழர் தரப்பு பலமாக இருந்தமையால், அதன் பின்னணியில் இந்தியாவும் இருக்கலாம் என்ற சந்தேகம் இலங்கை அரசுக்கு இருந்தமையால்இ இந்தியாவுக்கு எதிராக சீனாவை தம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தேவையால் சீன சார்புக் கொள்ளை ஒன்றை அவர்கள் வலுவாகப் பற்றிக்கொண்டார்கள். 2009 க்குப் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் இந்தியாவை நோக்கி வருகின்றார்கள் என்பதை சிங்கள



புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றார்கள்.

இந்த நிலையில்தான் வடக்கு - கிழக்கு தமிழர்கள் இலங்கைத் தீவின் பொருளாதாரத்தில் எவ்வாறான ஒரு பாத்திரத்தை வகிப்பார்கள் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. ஒரு பொருளாதாரத்தை யார் பலமாக வைத்திருக்கின்றார்களோ அவர்கள் பேரம்பேசும் சக்தியைக் கொண்டவர்களாக இருப்பார்கள். ஒன்றில் சனத்தொகையில் அதிகமாக இருக்க வேண்டும். அல்லது மனித வள ஆளுமையில் பலமிருக்க வேண்டும். அல்லது பொருளாதாரத்தில் பலமிருக்க வேண்டும். எம்மைப் பொறுத்தவரையில் இலங்கைத் தீவில் சனத்தொகையில் நாம் பலமானவர்களாக இல்லை. மனித வள ஆளுமைப்பலம் கூட எம்மிடம் இல்லை. இப்போதும் பிரிதானியரிடம் கற்றுக்கொண்டதைப்போல வெள்ளைநிற உடையில் அலுவலகம் செல்வதில் நாட்டமாக இருக்கிறோமே தவிர கைத்தொழில் மயப்படுத்தப்படுவதற்கான மன உணர்வு போதியளவுக்கு கட்டியெழுப்பப்படவில்லை. இந்த நிலையில் எமது பொருளாதாரம் எங்கு நிற்கப்போகின்றது என்ற கேள்வி இருக்கின்றது.




பூகோள அரசியலின் அடிப்படையில் சார்க் போன்ற பிராந்திய அமைப்புக்கள் இப்போது பலமடைகின்றன. அதனைவிட இந்தப் பிராந்தியத்தில் பலமானதாக இருக்கின்ற இந்தியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது. இதன்படி 350 வரையிலான பொருட்கள் எந்தவிதமான வரிகளும் இல்லாமல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பரிமாறிக்கொள்ளப்படலாம் என்ற சலுகை இருக்கின்றது. இதனால் இலங்கையின் பொருளாதாரம் ஏமோ ஒரு வகையில் இந்தியாவின் பொருளாதாரத்துக்குள் வளரப்போகின்றது.

இப்போது உருவாகியிருக்கும் இந்த கடன் சுமையின் காரணமாக பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கியிருக்காவிட்டால், இந்தியாவுடன், அல்லது சீனாவுடன் அல்லது மற்றொரு நாட்டுடன் இணைந்ததாக இலங்கை தனது பொருளாதாரப் பாதையைக் கட்டமைக்கும் போது, நாங்கள் வடக்கு கிழக்கில் உள்ளவர்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருப்போம். ஏனெனில் நாங்கள் எங்களுடைய பொருளாதாரத்தை கைத்தொழில் பொருளாதாரமாகவோ அல்லது வலுவுட்டப்பட்ட பொருளாதாரமாகவோ கட்டமைக்கவில்லை. நாங்கள் வெறுமனே அரசாங்கத் தேவைகளுக்காகவோ அல்லது நிர்வாகத் தேவைகளுக்காகவோ அமர்ந்து வேலை செய்பவர்களாகத்தான் இருந்து வருகின்றோம்.

இந்த நிலையில் இன்று எம்மத்தியில் இருக்கின்ற முக்கியமான விடயம் என்னவென்றால், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கம் - அதனை தென்னிலங்கை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதனைவிட இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியுடன் இலங்கை இணையும்போது நாங்கள் என்ன செய்யப்போகின்றோம் என்ற கேள்வி எழுகின்றது.

அப்படிப் பார்க்கும்போது நாங்கள் விரைந்து இந்தியாவுடன் இணைந்து எமது பொருளாதாரத்தை கட்டமைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதற்கு இந்த இணைப்புக்கள் முக்கியமானது. இணைப்புக்கள் எப்போதும் எந்தப் பாதையால் செல்கின்றதோ அந்தப் பாதைதான் செழிக்கும். அந்த வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இந்த இணைப்பு - தொடர்பாடல் என்பது பொருளாதாரக் கொடுக்கல்வாங்கல்கள், ஏற்றுமதி இறக்குமதி என்ற அனைத்துமே மீண்டும் வடபகுதித் துறைமுகங்களினூடாக மேற்கொள்ளப்படுமாக இருந்தால்இ அதனூடாக இந்தப் பகுதியின் பொருளாதாரமும், இந்தியாவின் கைத்தொழில் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து பயணிக்கின்ற மிகப்பெரிய அனுகூலம் ஒன்று எங்களுக்கு வரும். எனவே இந்த இணைப்பு என்பது தவிர்க்க முடியாதது. அது பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை, மன்னார், திருகோணமலை ஆகிய துறைமுகங்கள் மூலமாக வரலாம். அதனால் அதற்காக விரைந்து தயார்படுத்தப்பட வேண்டும்.

இவைற்றின் மூலமாக பாரியளவிலான ஏற்றுதி, இறக்குமதி நடைபெறும் போது அது பாரிய பொருளாதாரமாக விரிவடையும். இதன் மூலமாக பலவிதமான வாய்ப்புக்கள் உருவாகும். அவற்றையெல்லாம் கையகப்படுத்தி அதன்மூலமான நலன்களை எம்மவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கத்தக்க வகையில் எமது தொழிலாண்மையும், எமது நிறுவன ஆற்றலும் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளதா, அதற்கான மூலோபாயங்கள் எம்மிடம் எந்தளவுக்கு இருக்கின்றது, எமது அரசியல், நிர்வாகத் தலைமைகள் எந்தளவுக்கு இவற்றில் பரந்த பார்வையைக் கொண்டிருக்கின்றனவா போன்ற மிகப்பெரிய கேள்விகள் எம்மத்தியில் உள்ளன. இந்தக் கேள்விக்கான பதில் இன்று வரையில் வெறுமையாகத்தான் உள்ளது.

ஏனென்றால் அந்த வகையில் நாம் இது வரையில் சிந்தித்துச் செயற்படவில்லை. எமது அரசியல் தலைமைக்கும் அந்த வகையில் தொலைநோக்கு கொண்ட பார்வை இல்லை. எமது புத்திஜீவிகள் என்று சொல்லப்படுபவர்களிடம் கூட இவ்விடயத்தில் அகன்ற பார்வை இல்லை. அவர்கள் புத்தகப்பூச்சிகளாகத்தான் இன்னமும் இருக்கின்றார்கள். சிங்கள புத்திஜீவிகளுடன் ஒப்பிடும் போது எமது புத்திஜீவிகள் அதிகளவுக்கு புத்தகப்பூச்சிகளாக இருப்பதால் அவர்கள் சமூகத்துக்கு எதனையும் செய்ய முடியவில்லை.

அப்படிப் பார்க்கும் போது இந்த இணைப்பு என்பது எமக்கு தவிர்க்க முடியாதது. அது கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்கு ஊடாகத்தான் மிகப்பெரிய ஊடாட்டம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடக்க வேண்டும். அது வடக்கு கிழக்கின் ஊடாக நடைபெறும்போதுதான் அதனுடைய அனுகூலங்கள் எமது பிரதேசங்களுக்கு சமமமாக எமது பிரதேசங்களும் பொருளாதார தளங்களாக மாறும். அவ்வாறு மாறும்போதுதான் எமது பொருளாதார ஆளுமைகள் வெளிப்படும். எமது பொருளாதார ஆளுமைகள் வெளிப்படும் போது தான் எமது பேரம்பேசும் சக்தி அதிகரிக்கும். எனவே இந்தியாவுடனான இந்த விமான மற்றும் கப்பல் சேவைகள் மூலமான இணைப்பு என்ற விடயம் மிகவும் முக்கியமானது. அதனை நாம் தவிர்க்க முடியாது. அதனை நாம் கையகப்படுத்த வேண்டும். அதற்காக விரைந்து எங்களைத் தயாரிக்க வேண்டும்.

# புதிய வெளிச்சம் ஏற்பாட்டில் இயற்கை விவசாய வாரம்...




புதிய வெளிச்சத்தின் ஏற்பாட்டில் இயற்கை விவசாய வாரத்தினை முன்னிட்டு மூன்று நாட்களாக கிளிநொச்சியில் இடம்பெற்ற தற்சார்பு மற்றும்தன்னிறைவுக்கான இயற்கை வேளாண் பயிலரங்கில் தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்திருந்த இயற்கை வேளாண் விஞ்ஞானிகளான பாமயன் மற்றும் சுந்தரராமன் ஆகியோர் நடத்தினார்கள்.

மேற்படி பயிற்சிப்பட்டறையில், ஹட்டன், நுவரேலியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இயற்கை வழி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

அத்தோடு இளம் சந்ததியினரிடையே தற்சார்பு பொருளாதார சிந்தனையை அறிமுகப்படுத்தும் நோக்கோடு வடமாகாண கல்வித்திணைக்களம், யாழ் பல்கலைக்கழக விவசாயபீடம் ஆகியோருடன் இணைந்து அக்ரி ஸ்டார் 2022 என்ற தொனிப்பொருளில் மாணவர்களிற்கிடையே நடாத்திய போட்டிகளிற்கான சான்றிதழ்களும் வழுங்கப்பட்டது.

அதனைவிட விவசாய மற்றும் விதை நூலகங்கள் விதை பகிர்வுக்க ஒருங்கிணைந்த பண்ணக்கான வழிகாட்டல்கள் என பல வழிகளில் இயற்கை விவசாய வாரத்தை பயனுள்ளதாக்கியிருந்தனர்.

இதனைவிட யாழ்ப்பாணம், ஹட்டன், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் புதிய வெளிச்சம் தமது நிகழ்வுகளை சிறப்பான முறையில் நடத்தியிருந்ததுடன், பெருமளவு இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் இவற்றில் பங்கேற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இயற்கை விவசாயத்தில் ஆர்வத்தையும், செயற்திறனையும் கொண்டுள்ள சமூகம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது.

**- கவி -**









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.01.2023இல் வெளியிடப்பெற்றது.